**செய்தி வெளியீடு எண்: 249** **நாள்: 03.05.2013**

# <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(3.5.2013)** தலைமைச் செயலகத்தில், நகை பறிக்கும் நோக்குடன் வந்த சிலரால் தாக்கப்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் திருமதி சுபஸ்ரீயின் மருத்துவம் மற்றும் பராமரிப்புச் செலவிற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **5** லட்சம் ரூபாய்க்கான காசோலையினை அவரது தாத்தா ஓய்வுப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் திரு. R.சந்திரமோகன் அவர்களிடம் வழங்கினார்கள்.

சென்னை, ஜாபர்கான்பேட்டை, ஆர்.வி. நகரைச் சேர்ந்த திருமதி சுபஸ்ரீ தனது வீட்டில் கடந்த **21.10.2009** அன்று தனியாக இருந்த போது அவரது நகைகளைப் பறிக்கும் நோக்கோடு வந்த சிலர் தாக்கியதில் அவரது மூளைக்குச் செல்லும் ரத்தக் குழாய்கள் பாதிக்கப்பட்டதால் சுயநினைவு இழந்தார். இதனை சரி செய்திட சென்னை மற்றும் சிங்கப்பூர் மருத்துவமனைகளில் பெரும் பொருட் செலவில் சிகிச்சை அளிக்கப்பட்டும், அவரது உடல்நிலையில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. காவல் உதவி ஆய்வாளராய் பணியாற்றி ஓய்வுப் பெற்ற இவரது தாத்தா மற்றும் இவரது பெற்றோர் திருமதி சுபஸ்ரீயின் சிகிச்சைக்காக தங்களது சேமிப்புகளையெல்லாம் செலவு செய்து விட்ட நிலையில், இவரது கணவரும் கைவிட்டு விட்ட சூழ்நிலையில் திருமதி சுபஸ்ரீ போரூரில் உள்ள அவரது பெற்றோர் இல்லத்தில் மிகுந்த சிரமத்திற்கிடையே பராமரிக்கப்பட்டு வருகிறார் என்ற செய்தியை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் திருமதி சுபஸ்ரீயின் மருத்துவம் மற்றும் பராமரிப்புச் செலவிற்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து **5** லட்சம் ரூபாய்க்கான காசோலையினை திருமதி சுபஸ்ரீயை பராமரித்து வரும் அவரது தாத்தா ஓய்வுப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் திரு. R.சந்திரமோகன் அவர்களிடம் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியின் போது, திருமதி சுபஸ்ரீயின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து **5** லட்சம் ரூபாய்க்கான காசோலையினை பெற்றுக் கொண்ட திருமதி சுபஸ்ரீயின் தாத்தா திரு. சந்திரமோகன் அவர்களும் அவரது குடும்பத்தினரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9**.
நாள்: 3.5.2013